## கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(வளர்ச்சி) அவர்களின் நடவடிக்கைகள்

## முன்னிலை: திரு.எஸ்.தேவராஜன்,B.Sc.,B.Ed.

ந.க.எண்.பஅ4/3282/2023

நாள்:22.10.2024.

பொருள்: பணியமைப்பு – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகு – கள்ளக்குறிச்சி மாவட்டம் – தமிழ்நாடு அமைச்சுப்பணி 2020–2021, 2021–2022 மற்றும் 2022–2023–ஆம் ஆண்டிற்கு தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைம் தொகுதி – IV –ல் ஒதுக்கீடு செய்யப்பட்ட நேரடி நியமன இளநிலை உதவியாளர்கள் – பணிவரன்முறை செய்து உத்தரவிடல் – சார்பு.

பார்வை:

1 செயலர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் சென்னை அவர்களின் கடிதம் எண்.1847 /PSD –D1/2023 நாள்:18.08.2023.

2 கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(வளர்ச்சி) அவர்களின் ந.க.எண்.பஅ4/3282/2023 நாள்:11.09.2023.

3 சம்பந்தப்பட்ட பள்ளிகளில் இருந்து பெறப்பட்ட தமிழ்வழி கற்றல் மெய்த்தன்மை அறிக்கை நகல்கள்.

4 துணைச்செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.1847/PSD-D1/2023, நாள்:09.07.2024

5 சம்மந்தப்பட்ட கட்டுப்பாட்டு அலுவலர்களிடமிருந்து வரப்பெற்ற பணி வரன்முறை கருத்துருக்கள்.

–0–0–

**உத்தரவு:**

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் நடைபெற்ற தமிழ்நாடு அமைச்சுப்பணி தொகுதி 4–ல் அடங்கிய இளநிலை உதவியாளர் பணிகளுக்கான போட்டித்தேர்வு மூலம் 2020–2021, 2021–2022 மற்றும் 2022–2023–ம் ஆண்டு தேர்வு செய்யப்பட்டு பார்வை 1–ல் காணும் தேர்வாணைய கடிதத்தின்படி கள்ளக்குறிச்சி மாவட்ட ஊரக வளர்ச்சி அலகிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, பார்வை 2–ல் காணும் உத்தரவின்படி கள்ளக்குறிச்சி மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில் பணி நியமனம் செய்து உத்தரவிடப்பட்டது. பணி நியமனம் செய்யப்பட்ட பணியாளர்களது தமிழ்வழி கற்றல் மெய்த்தன்மை பார்வை 3–இல் காணும் அறிக்கைகள் மூலம் உறுதிசெய்யப்பட்டதை தொடர்ந்து கீழ்காணும் 4 பணியாளர்களுக்கு, அவர்கள் இளநிலை உதவியாளர்/ஊர்நல அலுவலர் (நிலை–II) நிலையில் பணியில் சேர்ந்த நாளில் பணிவரன்முறை செய்து உத்தரவிடப்படுகிறது.

| வ. எண். | பணியாளரின் பெயர், பதவி மற்றும் பணிபுரியம் அலுவலகம் (திருவாளர்கள்) | பணியில் சேர்ந்த நாள் | பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|
| 1 | எம்.மைக்கல் ராஜ்,<br>இளநிலை உதவியாளர்,<br>மாவட்ட ஊராட்சி அலுவலகம்,<br>கள்ளக்குறிச்சி.<br>[Conditional: PSTM] | 14.09.2023<br>முற்பகல் | 14.09.2023<br>முற்பகல் |

| வ. எண். | பணியாளரின் பெயர், பதவி மற்றும் பணிபுரியும் அலுவலகம் (திருவாளர்கள்) | பணியில் சேர்ந்த நாள் | பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|
| 2 | ஆர்.அருண்குமார், ஊர்நல அலுவலர் நிலை–2, ஊராட்சி ஒன்றியம், தியாகதுருகம். [Conditional: PSTM] | 13.09.2023 முற்பகல் | 13.09.2023 முற்பகல் |
| 3 | தே.வானதி, இளநிலை உதவியாளர், ஊராட்சி ஒன்றியம், சங்கராபுரம். [Conditional: PSTM] | 13.09.2023 முற்பகல் | 13.09.2023 முற்பகல் |
| 4 | எஸ்.முருகம்மாள், ஊர்நல அலுவலர் நிலை–2, ஊராட்சி ஒன்றியம், உளுந்தூர்பேட்டை. [Conditional: PSTM] | 04.10.2023 முற்பகல் | 04.10.2023 முற்பகல் |

<u>நிபந்தனை</u>

"The regularization is subject to the outcome of the WP's pending on the files of the Hon'ble High court of Madras/Madurai Bench of the Hon'ble High court of Madras relating to the recruitment to the post included in Combined Civil Services Examination –IV (Group–IV)". சம்மந்தப்பட்டவர்களின் பணிப்பதிவேட்டில் உரியபதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என சான்றளிக்கப்படுகிறது.

மாவட்ட ஆட்சியரின் நேர்முக
உதவியாளர்(வளர்ச்சி),
கள்ளக்குறிச்சி.

22/10/24

பெறுதல்

சம்மந்தப்பட்ட பணியாளர்கள்(உரிய வழியாக).

நகல்: செயலர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் சென்னை.

நகல செயலர், மாவட்ட ஊராட்சி அலுவலகம், கள்ளக்குறிச்சி.

நகல்: வட்டார வளர்ச்சி அலுவலர்கள் (வ.ஊ/கி.ஊ) ஊராட்சி ஒன்றியம் தியாகதுருகம், சங்கராபுரம் மற்றும் உளுந்தூர்பேட்டை.

நகல்: பஅ4 இருப்பு கோப்பு.